No. of Printed Pages : **11**

# 6627

**A**

பதிவு எண்
Register Number

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

## PART - III

## உயிரியல் / BIOLOGY

( தமிழ் மற்றும் ஆங்கில வழி / Tamil & English Version )

கால அளவு : 3.00 மணி நேரம் ] [ மொத்த மதிப்பெண்கள் : 70

Time Allowed : 3.00 Hours ] [Maximum Marks : 70

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

**Instructions :** (1) Check the question paper for fairness of printing. If there is any lack of fairness, inform the Hall Supervisor immediately.

(2) Use **Blue** or **Black** ink to write and underline and pencil to draw diagrams.

குறிப்பு : **பகுதி-I** (உயிரி-தாவரவியல்), **பகுதி-II** (உயிரி-விலங்கியல்) தனித்தனி விடைத்தாளில் விடையளிக்கவும்.

**Note :** Candidate should answer **Part-I** (Bio-Botany) & **Part-II** (Bio-Zoology) in separate answer-books.

### பகுதி - I (உயிரி-தாவரவியல்) / PART - I (BIO-BOTANY)

**(மதிப்பெண்கள் : 35) / (Marks : 35)**

### பிரிவு - 1/SECTION - 1

குறிப்பு : (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **8x1=8**

(ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**Note :** (i) Answer **all** the questions.

(ii) Choose the most appropriate answer from the given **four** alternatives and write the option code and the corresponding answer.

**1.** காடுகள் அழித்தல் எதை முன்னிறுத்திச் செல்வதில்லை ?

(அ) மாற்றியமைக்கப்பட்ட உள்ளூர் வானிலை

(ஆ) வேகமான ஊட்டச்சத்து சுழற்சி

(இ) இயற்கை வாழிட வானிலை நிலை அழிதல்

(ஈ) மண் அரிப்பு

Deforestation does not lead to _________.

(a) alteration of local weather conditions

(b) quick nutrient cycling

(c) destruction of natural habitat weather conditions

(d) soil erosion

**2.** ஏலக்காய் _________ குடும்பத்தைச் சேர்ந்தது.

(அ) சொலேனேசி (ஆ) பைப்பரேசி

(இ) ஃபேபேசி (ஈ) ஜின்ஜிபெரேசி

Cardamom belongs to the family _________.

(a) Solanaceae (b) Piperaceae

(c) Fabaceae (d) Zingiberaceae

**3.** சாகுபடிக்கு ஏற்ற மண் வகை :

(அ) பசலை மண் (ஆ) களி மண்

(இ) மணல் (ஈ) வண்டல் மண்

The ideal soil for Cultivation is :

(a) Loamy soil (b) Clayey soil

(c) Sandy soil (d) Silt soil

**4.** வைரஸ் அற்ற தாவரங்கள் _________ ல் இருந்து உருவாக்கப்படுகின்றன.

(அ) ஆக்குத்திசு வளர்ப்பு (ஆ) செல் மிதவை வளர்ப்பு

(இ) புரோட்டோபிளாஸ்ட் வளர்ப்பு (ஈ) உறுப்பு வளர்ப்பு

Virus free plants are developed from :

(a) Meristem culture (b) Cell suspension culture

(c) Protoplast culture (d) Organ culture

**5.** _________ ''இந்திய பசுமைப் புரட்சியின் தந்தை'' என அழைக்கப்படுகிறார்.

(அ) M.S. சுவாமிநாதன் (ஆ) P. மகேஸ்வரி

(இ) மெண்டல் (ஈ) நெல் ஜெயராமன்

_________ is called as "Father of Indian Green Revolution".

(a) M.S. Swaminathan (b) P. Maheswari

(c) Mendel (d) Nel Jayaraman

**6.** டெஃப்ரோசியா பெர்பியூரியா ஒரு _________.

(அ) உயிரி களைக்கொல்லி (ஆ) உயிரி உரம்

(இ) தழை உரம் (ஈ) உயிரி பூச்சிக்கொல்லி

Tephrosia purpurea is a _________.

(a) Bio-herbicide (b) Bio-fertilizer

(c) Green manure (d) Bio-pesticide

**7.** கொடுக்கப்பட்டுள்ளவற்றில் எது பெரு கேமிட்டகத் தாவரத்தைக் குறிக்கிறது ?

(அ) சூல் திசு (ஆ) சூல்

(இ) கருவூண் திசு (ஈ) கருப்பை

Which of the following represent Megagametophyte ?

(a) Nucellus (b) Ovule

(c) Endosperm (d) Embryo sac

**8.** மகுட கழலையை உண்டாக்கும் பாக்டீரியா :

(அ) எஸ்செரிச்சியா கோலை (ஆ) பேசில்லஸ் சப்டிலிஸ்

(இ) பேசில்லஸ் துரிஞ்சியென்சிஸ் (ஈ) அக்ரோ பாக்டீரியம் டியுமிபேசியன்ஸ்

The bacteria responsible for causing Crown Gall :

(a) Escherichia coli (b) Bacillus subtilis

(c) Bacillus thuringiensis (d) Agrobacterium tumefaciens

## பிரிவு - 2/SECTION - 2

**குறிப்பு :** கீழ்க்காணும் வினாக்களில் **ஏதேனும் நான்கு** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

**4x2=8**

**Note :** Answer **any four** of the following questions.

**9.** ஸ்டோமியம் என்றால் என்ன ?

What is Stomium ?

**10.** இணை சேர்தலின் வகைகளைத் தருக.

Give the types of Synapsis.

**11.** மரபணு மாற்றத்திற்கு பயன்படுத்தப்படும் வேதிப் பொருட்களின் பெயர்களைக் கூறுக.

Name the chemicals used in Gene Transfer.

**12.** PAR – என்றால் என்ன ?

What is PAR ?

**13.** முதல்நிலை அறிமுகப்படுத்துதலை இரண்டாம்நிலை அறிமுகப்படுத்துதலிலிருந்து வேறுபடுத்துக.

Differentiate Primary introduction from Secondary introduction.

**14.** கூட்டுப் பரிணாமம் என்றால் என்ன ?

What is Co-evolution ?

## பிரிவு - 3/SECTION - 3

**குறிப்பு :** கீழ்க்காணும் வினாக்களில் **ஏதேனும் மூன்று** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **19 -க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **3x3=9**

**Note :** Answer **any three** of the following questions. Question No. **19** is **Compulsory**.

**15.** ஒட்டுதல் மற்றும் பதியமிடல் – வேறுபடுத்துக.

Differentiate Grafting and Layering.

**16.** மடியத்தின் முக்கியத்துவங்கள் எவையேனும் மூன்றினைப் பட்டியலிடுக.

List any three significance of ploidy.

**17.** வணிக வேளாண் காடு வளர்ப்பு மூலம் வளர்க்கப்படும் தாவரங்களுக்கு நான்கு எடுத்துக்காட்டுகளைத் தருக.

Give four examples for plants cultivated in commercial agroforestry.

**18.** ஸ்பைருலினா போன்ற நுண்ணுயிர்களை வளர்ப்பதற்கு எந்த பொருட்கள் பயன்படுத்தப்படுகிறது ?

What are the materials used to grow micro-organism like Spirulina ?

**19.** உயிரி கண்காணிப்பு பற்றி சிறு குறிப்பு எழுதுக.

Write short notes on Bio-monitoring.

## பிரிவு - 4/SECTION - 4

குறிப்பு : **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **2x5=10**

**Note :** Answer **all** the questions.

**20.** (அ) காற்று மகரந்தச் சேர்க்கை மலர்களில் காணப்படும் பண்புகள் யாவை ?

**அல்லது**

(ஆ) முழுமையற்ற ஓங்குத்தன்மையை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

(a) Give the characteristic features of Anemophilous plants.

**OR**

(b) Explain the incomplete dominance with example.

**21.** (அ) வறண்ட நிலத் தாவரங்களின் உள்ளமைப்பு தகவமைப்புகளை எழுதுக.

**அல்லது**

(ஆ) நீயறிந்த ஏதேனும் இரு தாவரங்களின் செயலாக்க மூலமருந்து மற்றும் மருத்துவ முக்கியத்துவத்தைத் தருக.

(a) Enumerate the anatomical adaptations of Xerophytes.

**OR**

(b) Give an account of active principle and medicinal values of any two plants you have studied.

## பகுதி - II/PART-II

## (உயிரி - விலங்கியல்)/(BIO-ZOOLOGY)

(மதிப்பெண்கள் : 35)/(Marks : 35)

## பிரிவு - 1/SECTION - 1

குறிப்பு : (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **8x1=8**

(ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**Note :** (i) Answer **all** the questions.

(ii) Choose the most appropriate answer from the given **four** alternatives and write the option code and the corresponding answer.

**1.** பட்டாவ் சிண்ட்ரோம் __________ எனவும் அழைக்கப்படுகிறது.

(அ) 13 - டிரைசோமி (ஆ) 18 - டிரைசோமி

(இ) டர்னர் சிண்ட்ரோம் (ஈ) 21 - டிரைசோமி

Patau's Syndrome is also referred to as :

(a) 13 - Trisomy (b) 18 - Trisomy

(c) Turner's Syndrome (d) 21 - Trisomy

**2.** பெற்றோர் உடலின் வெளிப்பகுதியில் மொட்டுகள் உருவாதல் இவ்வாறு அழைக்கப்படுகிறது :

(அ) ஜெம்யூல்கள் (ஆ) அக முகிழ்தல்

(இ) துண்டாதல் (ஈ) புற முகிழ்தல்

If Buds are formed on the outer surface of the parent body, it is called as :

(a) Gemmules (b) Endogenous budding

(c) Fragmentation (d) Exogenous budding

**3.** சீம்பாலில் அதிகம் காணப்படுவது :

(அ) IgD (ஆ) IgE (இ) IgM (ஈ) IgA

Colostrum is rich in :

(a) IgD (b) IgE (c) IgM (d) IgA

**4.** இன்டர்ஃபெரான்கள் என்பது :

(அ) உயிர் எதிர் பொருட்கள்

(ஆ) பாக்டீரிய எதிர்ப்புப் பொருட்கள்

(இ) பூஞ்சை எதிர்ப்புப் பொருட்கள்

(ஈ) வைரஸ் எதிர்ப்புப் பொருட்கள்

Interferons are :

(a) anti-biotics

(b) anti-bacterial substances

(c) anti-fungal substances

(d) anti-viral substances

**5.** கருத்தடை மாத்திரைகளில் காணப்படுவது :

(அ) ரிலாக்ஸின் மற்றும் புரோலாக்டின்

(ஆ) புரோஜெஸ்டிரோன் மற்றும் ஈஸ்ட்ரோஜன்

(இ) புரோஜெஸ்டிரோன் மற்றும் ரிலாக்ஸின்

(ஈ) ஈஸ்ட்ரோஜன் மற்றும் ரிலாக்ஸின்

Contraceptive pills contain :

(a) Relaxin and prolactin

(b) Progesterone and estrogen

(c) Progesterone and relaxin

(d) Estrogen and relaxin

**6.** மனிதனில் சேற்றுப்புண்ணை ஏற்படுத்துவது :

(அ) புரோட்டோசோவா (ஆ) வைரஸ்

(இ) பூஞ்சை (ஈ) பாக்டீரியா

The Athlete's foot disease in human is caused by :

(a) Protozoa (b) Virus

(c) Fungi (d) Bacteria

**7.** வாழிட சீரழிவினால் மிக கடுமையான பாதிப்புகளுக்கு உள்ளாகி அழியும் நிலையில் உள்ள விலங்கினம் :

(அ) இருவாழ்விகள் (ஆ) பாலூட்டிகள்

(இ) முட்தோலிகள் (ஈ) பறவைகள்

The animals that are at high risk of extinction due to habitat destruction is :

(a) Amphibians (b) Mammals

(c) Echinoderms (d) Birds

**8.** துணிகளில் படிந்த எண்ணெய் கறைகளை நீக்கப் பயன்படும் நொதி :

(அ) செல்லுலேஸ் (ஆ) பெக்டினேஸ்

(இ) புரோட்டியேஸ் (ஈ) லிப்பேஸ்

Enzyme used for removing oily stains from the clothes :

(a) Cellulase (b) Pectinase

(c) Protease (d) Lipase

## பிரிவு - 2/SECTION - 2

**குறிப்பு : ஏதேனும் நான்கு** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். **4x2=8**

**Note :** Answer **any four** of the following questions.

**9.** கருப்பைச் சுவரின் மூன்று அடுக்குகள் யாவை ?

What are the three layers of uterine wall ?

**10.** மரபணுக் குறியீட்டில் பொருளற்ற குறியீடுகள் என அழைக்கப்படுபவை யாவை ?

Which are called as non-sense codons in genetic code ?

**11.** குவி பரிணாமம், விரி பரிணாமம் – வேறுபடுத்துக.

Differentiate Convergent Evolution and Divergent Evolution.

**12.** வைரஸ்கள் மூலம் மனிதர்களுக்கு ஏற்படும் நோய்கள் எவையேனும் நான்கின் பெயர்களைக் கூறுக.

Name any four human viral diseases.

**13.** விரிவாக்கம் தருக.

(அ) CFC

(ஆ) PAN

Give the expansion of :

(a) CFC

(b) PAN

**14.** குறைவெப்ப வேறுபாடுடைய உயிரினங்கள் என்பவை யாவை ? எடுத்துக்காட்டுகள் தருக.

What are Stenotherms ? Give examples.

## பிரிவு - 3/SECTION - 3

**குறிப்பு :** கீழ்க்காணும் வினாக்களுள் **ஏதேனும் மூன்று** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **19 -க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **3x3=9**

**Note :** Answer **any three** of the following questions. Question number **19** is **Compulsory**.

**15.** இழப்பு மீட்டல் என்றால் என்ன ? எடுத்துக்காட்டு தருக.

What is meant by regeneration ? Give example.

**16.** குரோமோசோம் தொகுப்பு வரைபடத்தின் பயன்கள் எவையேனும் மூன்றினை எழுதுக.

Mention any three applications of karyotyping.

**17.** ஒற்றை செல் புரதம் என்றால் என்ன ? அவற்றின் பயன்களை எழுதுக.

What is single cell protein ? Write its uses.

**18.** சூழல் உள் பாதுகாப்பிற்கும், சூழல் வெளி பாதுகாப்பிற்கும் இடையே உள்ள வேறுபாடுகள் யாவை ?

What are the differences between in-situ and ex-situ conservation ?

**19.** முதிர் உயிரி திசுக்களை புதுப்பிக்க உதவும் பல்திறன் கொண்ட செல்கள் யாவை ? அவற்றின் அதிக உற்பத்திக்கான மூலாதாரம் எது ?

What are the multipotent cells involved in replenishing adult tissue ? What is the rich source for it ?

## பிரிவு - 4/SECTION - 4

**குறிப்பு :** பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும். **2x5=10**

**Note :** Answer the following questions.

**20.** (அ) மனித விந்து செல்லின் அமைப்பைப் படத்துடன் விவரிக்கவும்.

**அல்லது**

(ஆ) இம்யுனோகுளோபுலின் அமைப்பை தகுந்த படத்துடன் விளக்குக.

(a) Describe the structure of human sperm with a neat labelled diagram.

**OR**

(b) Explain the structure of immunoglobulin with suitable diagram.

**21.** (அ) புரத உற்பத்தியில், அமினோ அமிலங்களை கடத்துவதில் முக்கிய பங்கு வகிக்கும் RNA -வை படத்துடன் விளக்குக.

**அல்லது**

(ஆ) உயிரிய பல்வகைத்தன்மையின் இழப்பிற்கு முக்கிய காரணமான மனித செயல்பாடுகளை வரிசைப்படுத்துக.

(a) Explain the structure of RNA which plays a vital role in protein synthesis by transferring amino acids with diagram.

**OR**

(b) List out the human activities causing biodiversity loss.

**- o O o -**